ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,922 — 1970 සැප්තැම්බර් 4 වැනි සිකුරාදා — 1970.9.4

14,922 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 4 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (III)—வியாபார உரிமை அடையாளங்களும் ஆக்க உரிமை விளம்பரங்களும்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| *வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள்* .. | 155 | *அலங்காரச் சித்திரச்சட்ட விளம்பரங்கள்* .. .. | — |
| *வியாபார உரிமை அடையாள அறிவிப்பு* .. .. | — | *வடிவ அமைப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள்* .. | — |
| *ஆக்க உரிமைக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள்* .. | 160 | *பலவினமானவை* .. .. | — |

## வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள்

### வியாபார உரிமை அடையாள அலுவலகம்

வியாபார உரிமை அடையாளம் சம்பந்தமான சகல கடிதங்களும் வியாபார உரிமை அடையாளப் பகுதிப் பதிவாளர், கம்பெனிகள் பதிவாளர் அலுவலகம், கட்டடம் 5, எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

### பரிசோதனைக்குரிய நேரம்

அரசாங்க விடுமுறை தவிர்ந்த ஒவ்வொரு கிழமை நாட்களிலும் 10 மணி தொடக்கம் 4 மணிவரையிலும், போயா தினத்திற்கு முந்திய நாட்களில் 10 மணி தொடக்கம் 1 மணி வரையிலும் அலுவலகம் பொதுசனங்களின் அலுவலுக்குத் திறந்திருக்கும்.

எனினும், பரிசோதனைக்குரிய விண்ணப்பப்பத்திரங்கள் கிழமை நாட்களில் மாலை 3 மணி வரையிலும், போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மத்தியானம் 12 மணி வரையிலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

### நிறங்களை வரையறுக்கும் வியாபாரஉரிமைஅடையாளங்கள்

ஒரு வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யப்படும் பொழுது,அது குறிப்பிட்ட நிறங்களுக்கு வரையறுக்கப்பட்டதென்று விண்ணப்பப் பிரசுரத்தில் குறிப்பிட்டிருந்தால் அந்த நிறங்கள் கூடுமானவரை வழக்கமான கட்டியம் சார்ந்த முறையில் இந்துடனுள்ள அடையாளச் சின்னத்தில் காட்டப்படும்.

### கூட்டுச் சேர்க்கை

150 ம் அதிகார வியாபார அடையாளச் சட்டத்தின் 23 ம் பகுதியின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒரு அடையாளம் இன்னொரு வியாபார அடையாளத்துடன் கூட்டுச் சேர்க்கப் படவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தால், அது அதன் உத்தியோக எண்ணினால் காட்டப்படும்.

### " அ " அல்லது " ஆ " பகுதியின் கீழ் விண்ணப்பம்

பதிவேட்டின் " அ " பகுதியின் கீழ் வரும் விண்ணப்பங்கள் வேறு யாதும் எழுத்தின்றி உத்தியோக என் மூலமாகவே காட்டப்படும். பதிவேட்டின் " ஆ " பகுதியின் கீழ்வரும் விண்ணப்பங் ள உத்தியோக எண்ணுக்கு முன் " ஆ " என்ற எழுத்தால் தெளிவாகக் காட்டப்படும்.

---

வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்
அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

*எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் கூறிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.*

*அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,*
கொழும்பு,
*1969 ம் ஆம் திசெம்பர் மீ 14 ந் உ.*

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
*அரசாங்க அழுத்தகர்.*

## எதிர்ப்பு

பின்வரும் வியாபார அடையாளங்கள் பதிவு செய்வதை யாராயினும் எதிர்க்கக் காரணங்கள் இருந்தால் இந்த வர்த்தகப் பத்திரிகைத் தேதியிலிருந்து இரு மாதங்களுக்குள் அழிக்கப்படாத அல்லது படிவு செய்த 25 ரூபா பெறுமதியான முத்திரையுடன் ரி. எம். 7 பத்திரத்தில் எதிர்ப்பு அறிவித்தலைச் சமர்ப்பிக்க வேண்டும். பதிவாளர் தகுதியானதெனக் கருதினால், அவர் விதிக்கும் நிபந்தனைகளுடன் எதிர்ப்புத் தெரிவிக்கும் கால எல்லை நீடிக்கப்படலாம். பதிவு கோரும் விண்ணப்பக்காரர் தனது விண்ணப்பத்தை மீளப்பெறுவதற்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் முகமாக, முறைப்படியான அறிவித்தல் எதிர்ப்பு விண்ணப்பம் தயாரிப்பதற்கு வேண்டிய செலவைச் செய்யுமுன், அவருக்குக் கடிதமூலம் நியாயமான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். எதிர்ப்பவர் அத்தகைய அறிவித்தலைக் கொடுக்கத் தவறின், விண்ணப்பகாரர் எதிர்ப்பை எதிர்த்து வாதிடாதவிடத்து, எதிர்ப்பவரின் செலவு கோரும் மனு பரிசீலனை செய்யப்படும்போது அது கவனத்துக்கெடுக்கப்படும்.

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 31779. (2) பெற்ற திகதி : 1969 ம் வருடம் ஒகஸ்டு மாதம் 13 ந் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : கண்டி டெக்ஸ்ரையில் இண்டஸ்றீஸ் லிமிடெட், கம்பெனிகள் சட்டவிச் சட்டத்தின கீழ் இணைக்கப்பட்ட பொறுப்பு வரையிறுக்கப்பட்ட கம்பெனி, இல. 64, கெயிசர் விதி, கொழும்பு 11 என்பதை அதன் பதிவு செயத அலுவலகமாகக் கொண்டது ; தயாரிப்பவர்களும், வியாபாரிகளும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திரு. டி. என். துரைராஜா, த. பெ. இல. 1464. கொழும்பு. (5) வகுப்பு : 24. (6) வியாபாரச்சரக்கு : பருத்தியாலான துண்டு ஆடைவகை. (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :

KANDY TEXTILE
INDUSTRIES LIMITED

இவ் வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யுமிடத்து, "கெ. ரி. ஐ" என்ற எழுத்துகள் உபயோகிப்பதற்கு, ஏக போக உரிமை வழங்கப்படமாட்டாது.

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச் சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1970 ம் ஆண்டு எப்பிரல் மீ 9 ந் உ.

9–90

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 29874. (2) பெற்ற திகதி : 1968 ம் வருடம் ஜனவரி மாதம் 9ந் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : ஜீவத்ராம் ஹெம்ராஜ் தன்ரஜனி, "ஜீகே எக்ஸ்போர்ட் அண்டு இம்போர்ட் கம்பனி" என்பதாக வணிகம் செய்பவர், இல. 33 பாங்க்ஷோல் வீதி, கொழும்பு 11 ; தயாரிப்பாளரும் வணிகரும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : டி. என். துரைராஜா அவர்கள், த. பெ. இல. 1464 கொழும்பு (5) வகுப்பு : 3. (6) வியாபாரச் சரக்கு : ஔடதத் தயாரிப்புகள். (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :




இவ்வியாபார உரிமை அடையாளத்துடன் வியாபார உரிமை அடையாள இல. 24806 இணைக்கப்படவிருக்கிறது.

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 8 ந் உ.

9–91

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 31784. (2) பெற்ற திகதி : 1969 ம் வருடம் ஒகஸ்டு மாதம் 16 ந் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : ஆனந்தா செமகே, குமார செமகே, ஆகியோர், "செமகே கர்மாந்த" என்பதாக வணிகம் செயபவர்கள், இல. 70, குமார வீதி, கொழும்பு 11 ; வியாபாரிகளும், தயாரிப்பாளர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது :— (5) வகுப்பு : 15. (6) வியாபாரச்சரக்கு : முகம் பார்க்கும் கண்ணாடிகள். (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :

RAINBOW
MIRROR
COPPERED
SILVERING
SEMAGE INDUSTRIES

இவ் வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யுமிடத்து, "கொப்பேர்டு சில்வறிங்" என்ற சொற்கள் உபயோகிப்பதில் ஏகபோக உரிமை வழங்கப்படமாட்டாது.

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச் சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1970 ம் ஆண்டு ஜனவரி மீ 16 ந் உ.

9–88

---

(1) வியாபாரச் சின்னம் இல : 28239. (2) பெற்ற திகதி : 1966 ம் வருடம் ஆகஸ்டு மாதம் 21 ந் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : ப்பிரைடென் இங்க்., இல. 2350 வாஷிங்டன் வழி, சன்லிபண்ரோ, கலிபோனியா, யு. எஸ். ஏ. என்பதனை உதன் பிரதான வியாபார ஸ்தலமாகக் கொண்டு ஐக்கிய அமெரிக்க இராச்சியங்களில் உள்ள தெலவரே இராச்சிய சட்டங்களின் அடிப்படையில் இணைக்கப்பெற்று இயங்கி வரும் ஒரு கூட்டுத்தாபனம் ; உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் மேதர் அண்டு இராமநாதன், இல. 136, ஹல்ஸ்டோப் வீதி, கொழும்பு 12. (5) வகுப்பு : 39. (6) வியாபாரச் சரக்கு : 39 ம் வகுப்பிலுள்ள அலுவலக உபயோகத்திற்குரிய தட்டெழுத்து நகல் தயாரிப்பு இயந்திரம் இரண்டையும் ஒருங்கே இணைத்துப் பொருத்தப்பெற்றுள்ள உபகரணங்களும் அதற்குரிய உதிரிப் பாகங்களும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

Flexowriter

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு யூலை மீ 26 ந் உ.

9–73

(1) வியாபாரச் சின்னம் இல. : 26987. (2) பெற்ற திகதி : 1965 ம் வருடம் ஜூலை மாதம் 15 ந் திகதி. (3) விண்ணப்பத்தாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : ஜீவத்ராம் ஹெம்ராஜ் தன்ரஜனி, “ஜீகெ எக்ஸ்போட் அன்டு இம்போட் கம்பெனி” என்ற பெயரில் வணிகம் செய்பவர், இல. 33, பாங்க்ஷோல் வீதி, கொழும்பு 11; தயாரிப்பாளரும், வியாபாரியும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : டி. என். துரைராஜா அவர்கள், த. பெ. இல. 1464, கொழும்பு. (5) வகுப்பு : 3. (6) வியாபாரச் சரக்கு : ஆயுள்வேத ஔடத ஆக்கப் பொருள்கள்.. (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :

**ENERGON**

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1969 ம் ௵ மே மீ 6 ந் உ.

9–83

---

(1) வியாபாரச்சின்னம் இல. 29411. (2) பெற்ற திகதி : 1967 ம் வருடம் செப்ரம்பர் மாதம் 9 ந் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : உவின்துரொப் புறடக்ஸ் இங்க், தெலவரே இராச்சியச் சட்டங்களின் அடிப்படையில் ஒழுங்கு செய்யப்பட்டு தொடர்ந்து இயங்கிவரும் ஒரு கூட்டுத்தாபனம், 90, பார்க் சாலை நியூயோர்க் மாநகரம், நியூயோர்க் இராச்சியம் 10016, ஐக்கிய அமெரிக்க இராச்சியங்கள் என்பதில் அதன் அலுவலகத்தைக் கொண்டுள்ளது ; தயாரிப்பாளர்களும் வியாபாரிகளும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது:—(5) வகுப்பு:3. (6) வியாபாரச்சரக்கு : ஔடதம், மருந்துப்பாகசாலைத் தயாரிப்புகள் ஆகியவற்றில் உபயோகிக்கப்படும் ரசாயன சாரம். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம்:

**SULFAMYLON**

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1969 ம் ௵ ஒக்டோபர் மீ 13 ந் உ.

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

9–195

---

(1) வியாபாரச் சின்னம் இல. 30261. (2) பெற்ற திகதி : 1968 ம் வருடம் மே மாதம் 10 ந் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்): ஜெனரல் மோட்டார்ஸ்—ஹோல்டன்ஸ் பிறைவேற் லிமிரெட், விக்டோரியா இராச்சியத்தின் சட்டங்களின் அடிப்படையில் இணைக்கப்பெற்ற ஒரு கம்பனி, இல. 241, சல்மன் தெரு, போர்ட் மெல் போன் விக்டோரியா இராச்சியத்தில் உள்ளது, அவுஸ்ரேலியா பொதுநலவரசு என்பதை அதன் பதிந்த செயலகமாகக் கொண்டது ; தயாரிப்பாளர்களும் வியாபாரிகளும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜூலியஸ் அன்டு கிறிசி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு: 22. (6) வியாபாரச்சரக்கு : மோட்டார் வூர்திகள் அவற்றுக்குரிய மாற்றுப் பாகங்களும் துணைக் கருவிகளும்—இப்பொருட்கள் யாவும் இவ்வகுப்பிற் சேர்க்கப்பட்டவை. (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**TORANA**

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1968 ம் ௵ ஒக்டோபர் மீ 25 ந் உ.

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

9–197

---

(1) வியாபாரச் சின்னம் இல : 30764. (2) பெற்ற திகதி : 1968 ம் வருடம் ஒக்டோபர் மாதம் 15 ந் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : யுனிலிவர் லிமிடெட், (ஒரு பிரித்தானியக் கம்பனி) போர்ட் சன்லைட், செஷயர், இங்கிலாந்து ; தயாரிப்பாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : லிவர் பிரதர்ஸ் (சிலோன்) லிமிடெட், த. பெ இல. 283, கொழும்பு. (5) வகுப்பு : 48. (6) வியாபாரச் சரக்கு : 48 ம் வகுப்பிற் சேர்க்கப்பட்டுள்ள எல்லாப் பொருட்களும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**PEPSODENT**

இவ்வியாபார உரிமை அடையாளம், வியாபார உரிமை அடையாள இல. 2262, 22626 ஆகியவற்றுடன் இணைக்கப்படவிருக்கிறது.

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1969 ம் ௵ ஒக்டோபர் மீ 7 ந் உ.

9–86

---

(1) வியாபாரச் சின்னம் இல : 30492. (2) பெற்ற திகதி : 1968 ம் வருடம் ஜூலை மாதம் 25 ந் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : முத்தையா நடேசன், பொன்னுசாமி அயிலாண்டம், பெரியசாமிபிள்ளை கருப்பையா, மருதைபிள்ளை பொன்னுசாமிபிள்ளை, “கொலம்பு பளையகாட் கம்பனி” என்ற பெயரிலும் மாதிரியிலும் கூட்டாக வியாபாரம் செய்பவர்கள் ; இல. 192 1/1, இரண்டாம் குறுக்குத்தெரு, கொழும்பு 11 ; ஆடை வகை வியாபாரிகள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : டி. என். துரைராஜா அவர்கள், த. பெ. இல. 1464, கொழும்பு. (5) வகுப்பு : 38, (6) வியாபாரச் சரக்கு : சரொங்கள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :




இவ்வியாபாரக் குறி பதிவுசெய்யுமிடத்து, “பளையகாட்” என்ற சொல்லும், ‘100 × 100’ என்ற எண்களும் உபயோகிப்பதற்கு ஏகபோக உரிமை வழங்கப்படமாட்டாது.

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1969 ம் ௵ பெப்ரவரி மீ 21 ந் உ.

9–84

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 30244. (2) பெற்ற திகதி 1968 ம் வருடம் ஏப்ரல் மாதம் 30 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : ஷெல் இன்டர்நாஷனல் பெற்றோலியம் கம்பனி லிமிரெட், இங்கிலாந்தின் சட்டங்களின் கீழ் இணைக்கப்பட்ட ஒரு பிருத்தானியக் கம்பனி, ஷெல் சென்ரர், லண்டன், எஸ். இ. 1., இங்கிலாந்து ; வணிகர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜூலியஸ் அன்டு கிறிசி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 1. (6) வியாபாரச்சரக்கு : இவ்வகுப்பிற் சேர்க்கப்பட்டுள்ள எல்லாப் பொருட்களும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம்.

**VIANOL**

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1969 ம் ௵ மார்ச் மீ 10 ந் உ.

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்

9–199

(1) வியாபாரச் சின்னம் இல. 23288. (2) பெற்ற திகதி 1962 ம் வருடம் பெப்ருவரி மாதம் 23 ந் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்): ஸ்ராண்டர்டு வைக்கூம் ஓயில் கம்பனி, ஐக்கிய அமெரிக்க ராச்சியங்களிலொன்றான தெலவரே ராச்சியச் சட்டங்களின் அடிப்படையில் ஒழுங்கு செய்யப்பட்டு தொடர்ந்து இயங்கிவரும் ஒரு கம்பனி, இல. 100, 10 வது மேற்குத் தெரு, வில்மிங்ரன மாநகரம், நியூ காசில் பெரும் பகுதி, தெலவரே இராச்சியம் என்பதைச் சேர்ந்ததும், அதன் அலுவலகமொன்றினை இல. 1000 வெச்செஸ்ரர்சாலை, வையிற் பிளெயின்ஸ், நியூயோர்க், ஐக்கிய அமெரிக்காவிலும், பிரதான தொழிற்றுறையை இந்தியாவில்–இல. 17, ஜாம்ஷேட் ஜீ டாட்டா தெரு, சேர்ச் கேற் றிகிளமேஷன், பம்பாய், இந்தியா என்னுமிடத்தில் அமைந்துள்ளது ; தயாரிப்பாளர்களும், வியாபாரிகளும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜுலியஸ் அன்டு கிறீசி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 47. (6) வியாபாரச்சரக்கு : பிரகாசமாக்கும் எண்ணெய், எரிபபதற்குரிய எண்ணெய், தீசல் எண்ணெயும், எஞ்சின்களின் உட்புற எரிவை இயக்குவிக்கும் எண்ணெய், உராய்வு நீக்குமெண்ணெயும் கொழுப்பும், பெற்றோல், தூசு நீக்கும் பொருள்களும் சாரமும், கைத்தொழிற்குரிய எண்ணெய் (உட்கொள்ளுதல், அத்தியாவசிய தேவைகளுக்குரிய எண்ணெய்வகை தவிர்ந்தவை), கைத்தொழிற்குரிய கொழுப்பு தன்னியக்கவூர்திகளுக்குரிய எண்ணெயும் கொழுப்பும், மெழுகுதிரிகள், நாடாக்கள், திரிகள ஆகியவை. (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**STANDARD VACUUM**

இவ்வியாபார உரிமை அடையாளம், வியாபார உரிமை அடையாள இல. 6801, 7482, 7483, 7503, 10264, 22424 உட்பட இல. 23289க் கொண்ட அடையாளம் பதிவு செயயப்பட்டால், அத்தருணம், இவற்றுடன் இணைக்கப்படவிருக்கிறது.

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆப் மார்ச் மீ 16 ந வ.

9–201

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 29367. (2) பெற்ற திகதி : 1967 ம் வருடம் ஓகஸ்டு மாதம் 30 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : கவசக்கி ஸ்டீல் கோர்பரேஷன், ஜப்பானியச் சட்டங்களின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு கூட்டுத்தாபனம், இல. 1, 1–சோமெ, கிற்றஹொான் மச்சிடொறி, ஃபூகியாய்–கு, கோபே, ஜப்பான் ; தயாரிபபவர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள ஜூலியஸ் அன்டு கிறீசி, த. பெ. இல. 154, கொழும்பு, (5) வகுப்பு : 5. (6) வியாபாரச் சரக்கு : பொருட்கள் — ஓரளவு உறபத்தி செயயப்பட்ட உருக்கு—என்னவெனில் : பன்றியிரும்பு, பாளம், தகடு, அலகு, உருக்குக் கம்பம், கம்பிவடம் ; உருக்குத்தகடு, தகடு, சுருள், வளையம், உருக்குச் சட்டம், உருக்கு வார்ப்புகள், உருக்கு உலைகள், வார்ப்பிருமபுகள், சுருள்கள், இரும்புப் பொடி, முகப்பு அல்லது விளிம்புத் தகடு, ஆகியவற்றுடன், வேறு முழுவதும் உற்பத்தி செய்யப்பட்ட, அல்லது ஓரளவு உற்பத்தி செய்யப்பட்ட உருக்கு.
(7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**KAWASAKI**

இவ்விண்ணப்பம், பதிவு எட்டின் "ஏ" பகுதியிலிருந்து பதிவு எட்டின் "பி" பகுதிக்கு மாற்றப்பட்டுத் தொடர்ந்து, ஆவன செய்வதற்கு ஏற்கப்பட்டுள்ளது.

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1969 ம் ஆப் மே மீ 26 ந வ.

9–198

(1) வியாபாரச் சின்னம் இல. : 26817. (2) பெற்ற திகதி : 1965 ம வருடம் மே மாதம் 28 ம் திகதி. (3) விண்ணபபதாரர் (வியாபரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : ஸ்ரீ தயா நந், ஸ்ரீ பிரிஜ் மோகன்லால், ஸ்ரீ ஓம் பிரகாஷ், ஸ்ரீ சத்தியாநந் ஆகியோர் "ஹீரோ சைக்கிள இண்டஸ்ரீஸ்" என்ற பெயரில் வணிகம் செயபவர்கள், மில்லர்கனஜ, லுடியான, இந்தியா ; தயாரிப்பாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் : ஜூலியஸ் அன்டு கிறீசி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 22. (6) வியாபாரச் சரக்கு : துவிச்சக்கர வண்டிகளும், துவிச்சக்கர உறுப்புகளும். (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :

இவ்வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யுமிடத்து, "எச" என்ற எழுத்து உபயோகிப்பதற்கு, ஏகபோக உரிமை வழங்கப்படமாட்டாது.

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1967 ம் ஆப் ஜூன் மீ 27 ந வ.

9–196

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 30454. (2) பெற்ற திகதி : 1968 ம் வருடம் ஜூலை மாதம் 13 ந் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : றீம்ஸ்மா சிகரெட்டன்–ஃபப்ரிககன் ஜீ. எம். பி. எச்., ஜெர்மன் சட்டங்களின் அடிப்படையில ஒழுங்கு செயயப்பட்ட ஒரு கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பெனி, ஹம்பேக், பார்க்ஸராபி 51, மேற்கு ஜெர்மனி ; தயாரிபபாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் : ஜூலியஸ் அனடு கிறீசி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 45. (6) வியாபாரச் சரக்கு : எல்லாவித புகையிலை உற்பத்திப் பொருட்களும். (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :

**STATLER**

இவ்வியாபார உரிமை அடையாளம், வியாபார உரிமை அடையாள இல. 22427, 22428, 28354 ஆகியவற்றுடனும், இல. 30453, 30468, 30476, 30687, 30719, 30720 ஆகியவை பதிவு செய்யபபடுமாகில் அத்தருணம் இவற்றுடன் இணைக்கப்படவிருக்கிறது.

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1969 ம் ஆப் செப்ரம்பர் மீ 6 ந் வ.

9–192

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 30552. (2) பெற்ற திகதி : 1968 ம் வருடம் ஓகஸ்டு மாதம் 17 ந் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : சிலோன் டுபாக்கோ கம்பெனி லிமிடெட், இலங்கையில் பதிவுசெய்யப்பெற்ற ஒரு கம்பெனி, இல. 108, ஸ்கின்னேர்ஸ் வீதி வடக்கு, கொழும்பு 13 என்பதை அதன் பதிந்த அலுவலகமாகக் கொண்டது; சிகரெட்டுகளும், புகைத்தலுக்குரிய புகையிலையும் தயாரிப்பவர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : —. (5) வகுப்பு : 45. (6) வியாபாரச் சரக்கு : உற்பத்தி செய்யப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்படாத புகையிலை. (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :

**REGATTA**


ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி.
கொழும்பு, 1969 ம் ஆப் நொவெம்பர் மீ 20 ந வ.

9–186

(1) வியாபாரச் சின்னம் இல. : 25862. (2) பெற்ற திகதி : 1964 ம் வருடம் ஜூன் மாதம் 29 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : திருவாளர்கள் ஏ. எவ். ஜோன்ஸ் அன்டு கம்பனி லிமிடெட், (கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் இணைக்கப்பெற்ற வரையறுக்கப் பட்ட ஒரு கம்பனி) இல. 7, ப்ரேபுறூக் இடம், கொழும்பு 2 ; இறக்குமதியாளர்களும், ஏற்றுமதியாளர்களும், உற்பத்தியாளர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திரு. டி. என் துரைராஜா, த. பெ. எண். 1464, கொழும்பு. (5) வகுப்பு : 42. (6) வியாபாரச் சரக்கு : தேயிலை. (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :

**DIAMOND BRAND**



| அரபு சொற்கள் | சொற்களின் ஒலிப்பு | மொழிபெயர்ப்பு |
|---|---|---|
| 1 ம் வரிசை .. | அவ்க்கர் ஷாய் சிலனி .. | .. திறமான இலங்கைத் தேயிலை |
| 2 ம் வரிசை .. | அல் அல்மாஸ் .. | .. வைரம் |
| 3 ம் வரிசை .. | டி மாஸ்க் மோடாப் மார்க்கா மொஸ்கைல | .. மோடாப் டமஸ்கஸ் பதிவு செய்த வியாபார உரிமை அடையாளம் |
| 4 ம் வரிசை .. | வாரெட் ஆடிப் அன்டு சொப்பி ஒஸ்ராபி | .. ஆடிப் அன்டு சொப்பி ஒஸ்ராபில் இறக்குமதி செய்யப்பட்டது |

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1965 ம் ஆண்டு ஏப்ரல் மீ 9 ந் உ.

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

9–216

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 29855. (2) பெற்ற திகதி : 1967 ம் வருடம் டிசெம்பர் மாதம் 27 ந் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : கொசங்காஸ் (சிலோன்) லிமிடெட், இலங்கை கம்பெனிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் இணைக்கப்பெற்ற ஒரு கம்பனி, ஸ்ரீ பன்னுனந்த மாவத்தை, முகத்துவாரம், கொழும்பு 15 ; தயாரிப்பாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜூலியஸ் அன்டு கிறீசி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 1. (6) வியாபாரச் சரக்கு : எரிப்பதற்கும், சமைத்தலுக்கும், சூடாக்குவதற்கும், அப்பம் அல்லது ரொட்டி தயாரிப்ப தற்கும், இரும்புத்தகடு அல்லது கம்பிகளை உருகச் செய்து ஒட்டவைப்பதற் கும் விளக்கு எரிப்பதற்கும் இவை போன்ற உபயோகங்களுடன், கைத் தொழில், உற்பத்தி செய்யும் நிலை ஆகியவற்றிற்குத் தேவைப்படும் வாயு, வாயுக்கலவை. (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :




(அ) இவ்வியாபார உரிமை அடையாளம், வியாபார உரிமை அடையாள இல. 29853, 29854 ஆகியவற்றுடன் இணைக்கப்படவிருக்கிறது.

(ஆ) சுட்டுத்துண்டில் காணப்படும், நீலம், மஞ்சள், வெள்ளை ஆகிய நிறங்களுக்கு இவ்வுரிமை அடையாளம் மட்டுப்படுத்தப்பட் டிருக்கிறது.

(இ) இவ்வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யுமிடத்து, உருளையின் (சிலிண்டர்) உருவம் உபயோகிப்பதற்கு ஏகபோக உரிமை வழங்கப்படமாட்டாது.

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.


கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1968 ம் ஆண்டு ஒகஸ்டு மீ 31 ந் உ.

9–193

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 26640. (2) பெற்ற திகதி : 1965 ம் வருடம் ஏப்ரல் மாதம் 8 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : த அமெரிக்கன் டுபாக்கோ கம்பனி, ஐக்கிய அமெரிக்க இராச்சியங்களில் ஒன்றான நியூஜேர்சி இராச்சியத்தின் சட்டங்களின் அடிப்படையில் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு கூட்டுத்தாபனம், இல. 150, கிழக்கு 42 ம் தெரு, நியூயோர்க் மாநகரமும், இராச்சியமும், ஐக்கிய அமெரிக்க இராச்சியம் ; தயாரிப்பாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜூலியஸ் அன்டு கிறீசி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 45. (6) வியா பாரச் சரக்கு : உற்பத்தி செய்யப்பட்ட அல்லது தயாரிக்கப்படாத புகையிலை

யும், சிகரெட்டுகளும், சுருட்டுகளும். (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :



வியாபார உரிமை அடையாள இல. 13881 ன் உரிமையாளருக்கு, இவ் வியாபார உரிமை அடையாள விளம்பரம் தாங்கிய வர்த்தமானி அனுப்புவதாகக் கூறியதின் பேரில், ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

டபிள்யு. எம். செல்லையா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1966 ம் ஆண்டு மார்ச் மீ 3 ந் உ.

9–194

(1) வியாபாரச் சின்னம் இல. : 30679. (2) பெற்ற திகதி : 1968 ம் வருடம் செப்ரம்பர் மாதம் 25 ந் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : ஷெல் இன்டர்நாஷனல் பெற்றோலியம் கம்பனி லிமிடெட், இங்கிலாந்தின் சட்டங்களின் அடிப்படையில் இணைக்கப்பெற்ற ஒரு பிருத்தானியக் கம்பனி, ஷெல் சென்ரர், லண்டன், எஸ். இ. 1, இங்கிலாந்து ; வியாபாரிகள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜுலியஸ் அன்டு கிறீசி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 47. (6) வியாபாரச் சரக்கு : இவ்வகுப்பிற் சேர்க்கப்பட்டுள்ள எல்லாப் பொருட்களும். (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :

**COMPTELLA**

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச் சின்னப் பதிவாளர்,

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1970 ம் ஆண்டு மார்ச் மீ 21 ந் உ.

9–200

## ஆக்க உரிமைக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவித்தல்கள்

Pat. No. 5732

### அறிவித்தல்

பின்வரும் விவரக்கூற்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

1966 ஆம் ஆண்டு சனவரி மாதம் 9 ஆம் திகதிக்குரிய இல. 5732

**ஆதர் பிரட்டுலாந்து**

" மீளச்சேர்ந்த பாலை அல்லது பாற்சாரத்தை ஆக்கும் திருந்திய முறை "

பொழிப்பு :—

கண்டுபிடிப்பின் தன்மையை பின்வருமாறு கூறும் உரிமை கோரல்கள் 1, 6, 13 இல் இருந்து நிச்சயித்துக் கொள்ளலாம்.

1. மீளச்சேர்ந்த பால் விளைபொருளொன்று குறைந்தளவு நிறையால் 12 சதவீதக் கொழுப்பையும் ஒரு தாழ்ந்த கொழுப்புள்ள பாற்பின்னத்தையுங் கொண்டது. குறிப்பிட்ட தாழ்ந்த கொழுப்புள்ள பாற்பின்னம், குறைந்தளவு நிறையால் 20 சதவீத வெண்ணெய்க் கொழுப்பைக் கொண்டுள்ள அசல் பாற்சாரத்திலிருந்து எடுக்கப்பட்ட குறைந்தளவு 5 சதவீத பாற்பின்னத்தைக் கொண்டுள்ளது.

2. பாலும் பாற்சாரமும் கொண்ட தேர்ந்த கூட்டமொன்றிலிருந்து மீளச்சேர்ந்த திரவ உணவுப் பொருளொன்றை ஆக்கும் முறை : மேற்படி பாலும் பாற்சாரமும், உலர்ந்த பால்மாவையும் நீரையும் கொண்ட கலவையை ஓரினமாக்கல் மூலம் பெறப்பட்ட பாய்பொருளை வெண்ணெய்யுடன் கலத்தல் மூலம் பெறப்படுகிறது. மேற்படி உலர்ந்த பால்மா, குறைந்தளவு 15 சதவீதம் தொடக்கம் 40 சதவீதம் வரை கொழுப்பைக் கொண்டுள்ள பாற்சாரமொன்றை மையநீக்கல் மூலம் பெறப்பட்ட தாழ்ந்த பாற்பின்னத்தையும் வெண்ணெய்ப் பாலையுங் கொண்ட கூட்டத்திலிருந்து தேர்ந்தெடுத்த பதார்த்தமொன்றிலிருந்து பெற்ற உலர்ந்த மாவொன்றைக் கொண்டுள்ளது.

3. ஆடைநீக்கிய பாலும் குறைந்தளவு 10 சதவீதப் பால்மாவொன்றும் சேர்ந்த அடிக்கக்கூடிய பாற்சாரத்தை ஆக்கக்கூடிய மீளச்சேர்க்கும் முறையொன்றில் உபயோகிக்கக்கூடிய உலர்ந்த பால் மா. மேற்படி 10 சதவீதப் பால்மா, பாற்சாரத்தின் கொழுப்புக் கொள்ளளவை ஏறத்தாள 20 சதவீதத்திலிருந்து குறைந்தளவு 40 சதவீதம் வரை செறிவாக்குவதன் மூலம் பெறப்பட்ட தாழ்ந்த கொழுப்புப் பின்னமொன்றிலிருந்து தயாரிக்கப்படுகின்றது. 15 உரிமைகோரல்களும் 7 உதாரணங்களுமுள்ளன.

எசு. எல். த சில்வா,
ஆக்கவுரிமைப் பதிவாளர்.

கொழும்பு,
1968 ம் ஆண்டு பெரவரி மீ 7 ம் உ.

9–8/1

Pat. No. 5763

### அறிவித்தல்

பின்வரும் விவரக்கூற்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

1966 ஆம் ஆண்டு மார்சு மாதம் 22 ஆம் திகதிக்குரிய இல. 5763.
**தோமக கேபற்று கென்று.**

" வழுக்குக் கதவுகளில் திருத்தங்கள். "

பொழிப்பு :—

கண்டுபிடிப்பின் தன்மையை பின்வருமாறு கூறும் உரிமைகோரல்கள் 1, 2 இல் இருந்து நிச்சயித்துக் கொள்ளலாம்.

1. நிலையான சட்ட வேலைப்பாடொன்றையும் வழுக்கும் சட்ட வேலைப்பாடொன்றையும் கொண்ட வழுக்கும் கதவு. இரு சட்ட வேலைபாடுகளும் தளத்தில் நிரப்பும் ஆப்புவடிவான குறுக்கு வெட்டு முகத்தைக் கொண்டவை. வழுக்கும் பகுதியை நிலையான பகுதிக்குச் சமாந்தரமாக அதே தளத்தில் செல்லச் செய்யும் வழிகாட்டி, அதன் மூலம் ஆப்பைத் திறக்கவோ அல்லது மூடவோ செய்யும் வழிவகையைக் கொண்டது. ஆப்புருவான பரப்புக்களைச் சுற்றியமைக்கப்பட்டுள்ள அடைப்புப் பட்டி, மேற்சொன்ன பகுதிகள் வரிசையாக ஒருங்கு கொண்டுவரப்படும்போது, அமுங்கி ஆப்புருவான பரப்புக்களில் ஓர் அடைப்பாகின்றது.

2. குளிரான சேமிப்பிடமொன்றின் அல்லது வேறு அடைப்பிடமொன்றின் நுழைவாயிலுக்குப் பிரயோகிக்கக்கூடிய அலகாக, உரிமைகோரல் 1 இன் படியமைக்கப்பட்ட வழுக்குக் கதவு. இதிலுள்ள வழிகாட்டமைப்பு நிலையான தண்டவாளமொன்றையும் ; அதிலிருந்து உராய்வற்ற அங்கத்தில் தொங்கும் கதவின் அசையும் பகுதியையும் ; கதவின் அசையும் பகுதியின் அடிப்பாகத்திற்கும் கதவின் திறந்த தரைப்பகுதிக்குமிடையே ஒரு கீழ்வழிகாட்டியையும் கொண்டது. கதவின் அசையும் பகுதியை நிலையான பகுதிசார்பாக கதவின் அசையும் பகுதிக்குச் செங்குத்தான தளமொன்றில் சரிசெய்வதற்கு வழிவகையுண்டு. இவ்வழிவகைமூலம் ஆப்புருவான மேற்பரப்புகளிடையேயுள்ள அடைப்பமுக்கத்தை மாற்ற முடியும். 14 உரிமைகோரல்களும் 2 படங்களுமுள்ளன.

எசு. எல். த சில்வா,
ஆக்கவுரிமைப் பதிவாளர்.

கொழும்பு,
1968 ம் ஆண்டு பெப்ரவரி மீ 7 ம் உ.

9–8/2

5788

## அறிவித்தல்


பின்வரும் குறிப்பீடு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது —

1966 ஏப்ரல் 26 ம் திகதியின் 5788 ம் இலக்கம்—(முந்துரிமைத் திகதி 6.5.65 கோரும் ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் F 45971 IVD/12 p இலக்கம் கொண்ட பொது இணக்க ஒப்பந்த விண்ணப்பம்).

பாப்வெயர்க்க ஹேர்ஸ்ட் அக்ட்சியென்கசேல்சவ்ட் போர்மல்ஸ் மைஸ்தர் லூசியஸ் உண்ட் புறூனிங்.

" புதிய அமிடோவல்கையில்—பென்சீன்சல்போனைல் செமிகார்பசைட்ஸ் உம் அவற்றைத் தயாரிக்கும் முறையும்."

சருக்கம்.—பின்வருமாறு குறிப்பிடப்படும் உரிமைக்கோரிக்கை 1லிருந்து கண்டுபிடிப்பின் தன்மையை உறுதியாக அறிந்துகொள்ளலாம் :



என்ற சூத்திரத்தின் பென்சீன்சல்போனைல் செமிகார்பசைட்ஸ்.

இதில் R

(அ) பெனைல் மூலிகத்தைக் குறிக்கிறது. இதன் மற்றுப்பொருளாக ஒருமுறை, இரண்டு முறை, அல்லது மூன்று முறை இதிர்த அற்கயில், இதிர்த அற்கைல், இதிர்த அற்கொட்சி அல்லது எலோஜனும், இன்னும் மெதிலீன் டியொட்சி அல்லது திரைபுரோலோ—மெதிலீன் உபயோகிக்கப்படலாம்.

(ஆ) ஒரு தியோபோனைல் மூலிகம். இதன் மாற்றுப்பொருளாக ஒரு முறை அல்லது இரண்டு முறை இதிர்த எலோஜன், இதிர்த அற்கயில, இதிர்த அற்கொட்சி, இதிர்த அற்கைலஒட்சி, இதிர்த அற்கொட்சி அற்கொட்சி, இதிர்த பென அற்கொட்சி அல்லது இதிர்த ஏனைல, அல்லது தியோபேன் மூலிகத்துடன் தனது இருமுனைகளாலும் தொகுக்கப்பட்ட ஒரு பல்மெதிலீன் சங்கிலி. இச்சங்கிலி 3 முதல் 4 காபன் அணுக்களை கொண்டிருக்கும்.

(இ) ஒரு பைரல் மூலிகம் இதன் மாற்றுப்பொருளாக மெதைல் அல்லது எலோஜன் உபயோகிக்கப்படலாம்.

(ஈ) ஒரு பெனைல் மூலிகம். இது 1 முதல் 4 காபன் அணு அடங்கிய அல்கயிலீன் ஊடாக பிணைக்கப்பட்டிருக்கும். இச்சங்கிலி இதித்தும் அத்துடன்/அல்லது நிறைசெறிவூட்டப்பெறுதலும் அத்துடன்/அல்லது $CH_2$ கூட்டத்துடன் சேர்ந்த ஒன்றிற்குப் பதிலாக ஒட்சிசன் அணு ஒன்றைக் கொண்டிருக்கலாம். பெனைல் மூலிகம், விரும்பினால், இதிர்த அற்கயில் அல்லது அற்கொட்சி அல்லது எலோஜெனைக் கொண்டிருக்கலாம்.

(உ) ஒரு சைக்ளோஎக்சைல் அல்லது சைக்ளோஎக்சினைல் மூலிகம்.

(ஊ) 1 முதல் 11 காபன் அணுக்களைக் கொண்டிருக்கும் ஒரு அற்கயில் மூலிகம். இது நிறைசெறிவூட்டப் பெறுததாகவும் இருக்கலாம்.

Y ஒரு $CH_2$—$CH_2$ அல்லது—$CH_2$—$CH$
| 
$CH_3$

கூட்டத்தைக் குறிக்கிறது.

$R^1$ குறிப்பதாவது—

(அ) 3 முதல் 7 காபன் அணுக்கள் அடங்கியுள்ள ஓர் அற்கயிலீன்—இமினோ மூலிகம். அற்கயிலீன் சங்கிலியில் இதன் மாற்றுப் பொருளாக 2 முதல் 4 மெதைல் கூட்டங்கள், அல்லது அற்கயில் அல்லது 3 காபன் அணுக்கள் வரை அடங்கியுள்ள அற்கொட்சி, அல்லது 5 காபன் அணுக்களைக் கொண்டுள்ளவிடத்து இது நிறைசெறிவூட்டப் பெறுததாயிருக்கலாம், அல்லது 1 முதல் 3 காபன் அணுக்களைக் கொண்டதும், மாற்றுப் பொருளாக இதிர்த அற்கயில் அல்லது அற்கொட்சி உபயோகப்படுத்தக்கூடியதுமான ஓர் என்டோ அற்கயிலீன் கூட்டத்தை அடக்கியிருக்கலாம்.

(ஆ) மூலிகம் $N\langle^{R_1}_{R_2}$, இதில் $R_1$ உம்

$R_2$ உம் இதிர்த அற்கயிலைக் குறிக்கும். $R_2$ பென்சைலையும் குறிக்கும். இதிலின்று உடற்கூற்றுல் ஏற்றுக்கொள்ளக்கூடிய உப்பு.

18 உரிமைக் கோரிக்கைகளும் 9 உதாரணங்களும் உள்ளன.

எஸ். எல். டி சில்வா,
ஆக்கவுரிமைப் பதிவாளர்.

கொழும்பு,
1968 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 4 ந் உ.

9-8/3

C 3

## அறிவித்தல்


பின்வரும் விபரக்கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1966 ஏப்பிறல் 26, இல. 5789 (1965.7.17 திகதி ஜேர்மன் ஆக்கவுரிமை இல. F 46641 IVb/120 முன்னுரிமை கோரும் மாபு ஒழுங்கு விண்ணப்பம்) பாப்வேக் ஹோஸ்ட் அக்டியன்ஜெஸெலகாவற் வோமல்ஸ் மீஸ்டர்லூசியஸ & புறூனிங்.

" பென்சீன் சல்பனைல் யூரியாக்களும், அவற்றைத் தயாரிக்கும் முறையும் ".

சாரம்.—புதிது காண்டலின் தன்மைகளை உரிமைக்கோரிக்கை 1 இலிருந்து ஆய்ந்து அறிந்து கொள்ளலாம். அது வருமாறு :—

குறியீடு உடைய சேர்வை



இதில் R ஐதரசனையும், $R^1$ குறுகிய அற்கைலையும் அல்லது குறுகிய பிணைஅற்கிலையும் குறிக்கும்.

(அ) 2 முதல் 8 வரை காபன் அணுக்களையுடைய ஒரு அற்கைல், அற்கீன் அல்லது மெகைத்தோ அற்கைல் தொகுதி.

(ஆ) 4 முதல் 8 காபன் அணுக்களையுடைய ஒரு அற்கொட்சி அற்கைல், அற்கைல் மேக்காத்தோ அற்கைல் அல்லது அற்கைற் சல்பனைலற்தொகுதி—மேலே குறிப்பிட்ட காபன் அணுக்களிற் குறைந்த பட்சம் இரண்டுகாபன் அணுக்களாவது அற்கொட்சி அற்கைலினது, அற்கைல் மேக்காத்தோ அற்கைலினது அல்லது அற்கைற்சல்பனைலற்கையினது ஏற்றகயின தொகுதிக்குரியது.

(இ) ஒரு குறுகிய பிணைலற்கைல் அல்லது பிணைல்வட்டப்புரோப்பைல் தொகுதி.

(ஈ) ஒரு குறுகிய வட்ட எட்சைல்—அற்கைல் வட்டஎத்தைப் மீதைல், வட்ட எந்தைல் ஈதைல் அல்லது வட்ட ஒதைல் மீதைல் தொகுதி.

(உ) 1 அல்லது 2 எந்தோ அற்கைலின் காபன் அணுவையுடைய வட்ட எட்சைல், எந்தோ அற்கைலின எட்சைல், எந்தோ அற்கைலின—வட்ட எட்சைல் மீதைல் அல்லது எந்தோ அற்கைலின் வட்ட எட்சினைல் மீதைல் தொகுதி.

(ஊ) ஒரு குறைந்த அற்கைல்வட்டஎட்சைல் அல்லது குறைந்த அற்கொட்சிவட்டஎட்சைல் தொகுதி.

(எ) 5 முதல் 8 காபன் அணுக்களையுடைய ஒரு அற்கைல் தொகுதி.

(ஏ) ஒரு வட்ட எட்சினைல் அல்லது வட்ட எட்சினைல்மீதைல் தொகுதி.

(ஐ) 4 அல்லது 5 காபன் அணுக்களையும், ஒரு ஒட்சிசன் அணுவையும், சல்ப அணுவும் இரண்டிற்கு மேற்படாத எதிலீன்பிணைப்புக் கொண்ட பல்லினவட்டவளையம்.

(ஒ) 4 அல்லது 5 காபன் அணுக்களையும் ஒரு ஒட்சிசனையும் அல்லது சல்பஅணுவையுடைய பல்லின வட்டவளைய மெதிலீனமூலத்தின் மூலம் ஐதரசன அணுவுடன இணைந்தன. அத்துடன இரண்டுக்கு மேற்படாத எதிலின பிணைப்பையும் அடக்கியது.

X ஐதரசன், உப்பாக்கி, குறைந்த அற்கைல், குறைந்த அற்கொட்சி, மும்புளோரோ மீதைல், அல்லது நைதரோ தொகுதியைக் குறிக்கும்.

Y 1 முதல் 4 காபன் அணுக்களையுடைய ஐதரோகாபன் சங்கிலியைக் குறிக்கும்.

N ஆனது 1 அல்லது 2 அல்லது 3 ஐக் குறிக்கும்.

U ஒட்சிசின் அல்லது சல்பரைக் குறிக்கும்.

Z ஒரு நிரம்பிய அல்லது நிரம்பாத கொழுப்புக்குரிய அல்லது வட்ட கொழுப்புக்குரிய ஆறுக்கு மேற்படாத காபன் அணுக்களையுடைய ஐதரசன் காபன் முதல், ஒரு பிணைற்தொகுதி அல்லது ஒரு பென்சைலதொகுதி -0- $(CH_2)_n$ U—Z தொகுதி 2 ம் இடத்திலும் X 4 ம் அல்லது 5 இடத்திலும் இருப்பது சிறந்தது.

17 உரிமைக்கோரிக்கைகளும் 4 உதாரணங்களும் உள்ளன.

எஸ். எல். டி சில்வா,
ஆக்கவுரிமைப் பதிவாளர்.

கொழும்பு,
1968 ம் ஆண்டு ஏப்பிறல் மீ 2 ந் உ.

9-8/4

## அறிவித்தல்

கீழ்காணும் வேலைவிபரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது :—


26 சித்திரை, 1966. இலக்கம் : 5790.

சன்டோஸ் பொறுப்பு வரையறுக்கப்பட்ட வியாபார ஸ்தாபனம். " இன்டோல் மூலப்பேறுகள் சம்பந்தமான முன்னேற்றங்கள் " சாரச் சுருக்கம் :

கண்டுபிடிப்பின் தன்மையை கீழ்க்காணப்படும் உரிமையிலிருந்து உறுதிப்படுத்தலாம்.

இன்டோல் மூலப்பேறு உற்பத்தி செய்யும் சூத்திரம் 1 இன் ஒரு முறை.


I ம் சூத்திரம்




I

இச்சூத்திரத்தில் R 1, ஒரு ஐதரசன் அணுவை அல்லது ஒரு மேதயிற் மூலிகத்தை குறிக்கிறது. R 2 சமபுறபைலே, குக்கோபுறவைலே அல்லது பட்டைலே, அல்லது டேர்ட் பட்டைலே மூலிகத்தையும் சூத்திரம் II இன் ஐதரோ-ஒட்சி மூலபேற்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள அவைகளின் அமிலச் சேர் உப்புகளையும் குறிக்கிறது.


II ம் சூத்திரம்




II

இச்சூத்திரத்தில் R 1 பின்வரும் முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. கார உலோக உப்பு உருவில் எபிகுலோரோஜரின் உடன் தாக்கம்புரிய விடப் படுகிறது. எஞ்சிவிடப்பட்டிருக்கும் தாக்க உற்பத்திப்பொருள் ஒரு அமிலச் சேர்கருவியில் சூத்திரம் III க் கொண்ட ஒரு அம்மயினுடன் வெப்பமாக்கப் படும்.

III ம் சூத்திரம்




III

இதில் R 2 மேல் காட்டப்பட்டிருக்கும் முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. இதில் $R_3$2 மேல் காட்டப்பட்டிருக்கும் முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது $R_7$3 ஐதரசன் அணுவொன்றை அல்லது ஒரு பென்சைல் மூலிகத்தைக் குறிக்கிறது. பெறப்படும் படிவு உற்பத்தியில் காணப்படும் பென்சைல் மூலிகம் ஐதரசன் வகுப்பினுல் விரிகையடையச் செய்யப்படுகிறது. அமில உப்பு ஒன்று தேவைப்பட்டால், அத்தனிக்காரம் ஒரு சேதன அல்லது அசேதன அமிலத் துடன் சேரவிடப்படுகிறது.

31 உரிமைகளும் 10 உதாரணங்களும் உண்டு.

எஸ். எல். டீ. சில்வா,
உரிமைப் பத்திர பதிவுகாரர்.

கொழும்பு,
1968 ம் ஆண்டு மாசி மீ 9 ந் வ.

9–8/5

---

## அறிவித்தல்

பின்வரும் நிர்ணயக் குறிப்பீடு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது :—

1966 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ந் திகதிய 5,791 ம் இலக்க முடையது.

சிக்கோ எலக்ட்றிக்ஷொக் கொண்ட்ரோல் டிவைஸ் பிறைவேட் லிமிடெட்.
" ஒரு மின் அதிர்ச்சிக் கட்டுப்பாட்டுச் சாதனம் ".

**சாரம்**

உயிர் பிரதான மின் விநியோகக் கம்பி தற்செயலாக புவிதொடுப்புக்கு ஆளானுல், தாழ் இழுவிசை விநியோகத்தை துண்டிப்பதற்கான ஆய் கருவி பற்றி கண்டு பிடிப்பாளர் விபரிக்கிருர். உயர்பிரதான மின்னேட்டத் தின் பருமனையும் சார்பற்ற மின்னேட்டத்தின் மருமனையும் ஒப்பு நோக்கும் அடிப்படையில் இந்தக் கண்டு பிடிப்பு அமைந்துள்ளது. இரண்டு சுருட்களும் எடுத்துச் செல்லும் மின்னேட்ட பருமன்களிடையே உள்ள வித்தியாசமானது, மின் பெருக்கி ஒன்றுடன் சுழலிணைக்கப்பட்ட மூன்ருவது சுருளை, காந்தவியல் வகையில் தாக்குகிறது. அந்த வகையில் ஏற்படும் தாக்குதல் காரணமாக புதிய மின்னேட்டம் ஒன்று உற்பத்தியாகிறது. அந்தப் புதிய மின்னேட்டம் திரும்பத் திரும்ப ஓடும் அஞ்சல் முறையாக அமைவதால், அது மின்சுற்றை துண்டிக்கும் சாதனமாகவும் அமைந்து விடுகிறது.

இது சம்பந்தமாக 19 பாத்தியதைகளும், வரைபட காகிதம் ஒன்றும் உள்ளது.

எஸ். எல. டி. சில்வா,
ஆக்க உரிமைப் பதிவாளர்.

கொழும்பு,
1968 ம் ஆண்டு அக்டோபர் மீ 26 ந் வ.

9–8/6

---

## அறிவித்தல்

பின்வரும் விபரக்கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது :—

1966 ம் ஆண்டு ஏப்ரல் 30, இல. 5792 (65.5.3 ம் திகதி ஸ்விட்சாலாந்து இல. 6121/65 முன்னுரிமை கோரும் மரபொழுங்கு விண்ணப்பம்).

வரையறுத்த சாண்டோஸ்.


" அந்திரனிக்கமிலப் பெறுதிகளினதும் அல்லது அவைகளுடன் சம்பந் தப்பட்டவைகளினதும் செம்மையாக்கல்கள் "

**சாரம்**


புதிது காண்டலின் தன்மைகளை, உரிமைக்கோரிக்கை 1 இலிருந்து ஆய்ந்தறிந்து கொள்ளலாம்.

அது வருமாறு :—

பொதுக்குறியீடு 1 இன் சேர்வைகளை ஆக்கும் ஒரு முறை.




இதில், $R_1$ ஆனது 1 முதல் 6 காபன் அணுக்கள் வரை கொள்ளும் அற்கைல் முதலை அல்லது 7 முதல் 9 காபன் அணுக்கள் வரைகொள்ளும் அற்கைல் முதலையும் குறிக்கும். $R_2$ ஆனது ஐதரசன், குளோரின் அல்லது புரோமின் அணுவைக் குறிக்கும். இதில் $R_2$ இன் ஒரு குறியீடாவது பொதுக் குறியீடு II இன் சேர்வையில் குளோரினை அல்லது புரோமினையும் அவைகளினது உப்புக்களைக் குறிக்க வேண்டும்.




மேலே காட்டிய கருத்துக்களைக் கொண்ட $R_1$ $R_2$ என்பன ஓர் ஒடுக்க ஊக்கியின் முன்னிலையில் 0—குளோரோ பென்சோயிக்கமிலத்துடன் சடத்துவ சேதனவுறுப்புக்கரைதிரவத்தில் ஒடுக்கப்பட்டது. அதன் உப்பு தேவையாகும்போது அதை உப்பாக்கலாம்.

24 உரிமைக் கோரிக்கைகளும் 7 உதாரணங்களும் உள்ளன.

எஸ். எல். டி சில்வா,
ஆக்கவுரிமைப் பதிவாளர்.

கொழும்பு,
1968 ம் ஆடு பெப்பிரவரி மீ 7 ந் உ.

9–8/7

---

## அறிவித்தல்

5794

பின்வரும் குறிப்பீடு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது :—

1966 மே 8 ம் தேதியின் 5,794 ம் இலக்கம்— (முந்துரிமைத் திகதி 17.5.65 கோரும் ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் 456,265 ம் இலக்க பொது இணக்க ஒப்பந்த விண்ணப்பம்).

அலுமினியம் லப்போரட்டரீஸ் லிமிட்டெட்

" அலுமினியத்தை மீட்டுப் பெறுவதற்கு சப்ஹலைட்டு வடிப்பு முறையில் மேம்பாடுகள், அல்லது இம்முறை சம்பந்தமான மேம்பாடுகள் ".

**சுருக்கம்**

பின்வருமாறு குறிப்பிடப்படும் உரிமைக் கோரிக்கை 1 விருந்து கண்டுபிடிப்பின் தன்மையை உறுதியாக அறிந்து கொள்ளலாம் :— பெரும்பாலும் அலுமினியம் திரையலேட்டைக் கொண்டிருக்கும் வாயு அருவியின் வெப்ப நிலையை மாற்றும் அல்லது உரோஞ்சும் வழியுள் பின்வருவன அடங்கும் : மேற்கூறப்பட்ட அலுமினியம் திரையலேட்டை வாயுநிலையில் அழியாமல் காத்துக்கொண்டு, இதில் கட்டுப்படுத்தப்பட்ட, உடனிணைந்த ஒரு பகுதியினூடாக வாயு ஓட்டத்தை ஏற்றமடையச் செய்தல் ; மேற்கூறப்பட்ட கட்டுப்படுத்தப்பட்ட உடனிணைந்த பகுதியில் வாயு பாய்ச்சலை, ஒரு உருகிய உப்புடன் விரிவாக்கப்பட்ட மேற்பரப்புத் தொடுக்கைக்கு கொண்டுவருதல்—மேற்படி வாயுவுக்கும் மேற்படி உருகிய உப்புக்குமிடைய வெப்பப் பரிமாற்றத்தை உண்டுபண்ணுவதற்கு ; மேற் கூறப்பட்ட உருகிய உப்பு பெரும்பாலும் மேற்கூறப்பட்ட கட்டுப்படுத்தப்பட்ட உடனிணைந்த பகுதியில் பாதுகாக்கப்படும் வெப்பநிலையினதும் அமுக்க நிலையினதும் கீழ் மேற்படி அலுமினியம் திரையலேட்டால் புறத்துறிஞ்சப் படாததாகவும், ஆவிபற்றற்றதாகவும் இருக்கும்.

7 உரிமைக்கோரிக்கைகளும் வரைபடங்கள் 1 தாளும் உள்ளன.

எஸ். எல். டி சில்வா,
ஆக்க உரிமைப் பதிவாளர்.

கொழும்பு,
1968 ம் ஆடு பெப்ரவரி மீ 7 ந் உ.

9–8/8

## அறிவிப்பு

பின்வரும் விவரணம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :—

1966 மே 12 ம் திகதிக்குரிய 5795 ம் இலக்கம்.

ஐக்கிய கண்ணாடி ஸ்தாபனத்தின் றெக்ஸ் எபேட் செபஸ்தியன் பிலிப்ஸ் அறிவிப்பாளர்.

" கொள்கல அடைப்புகள் "

**பொழிப்பு**

1 ம் உரிமையிலிருந்து புதிது காணும் தன்மை நிச்சயப்படுத்தப் படலாம். அது பின்வருமாறு கூறப்படுகின்றது :—

கொள்கலமொன்றிற்கு இணையும் மென்றகமொன்றை பிரயோகிக்கும் முறையில் மென்றகடு அல்லது கொள்கலம் அல்லது இரண்டும் உலோ கத்தால் ஆனது. இதில் மென்றகட்டை இணையும் அமுக்கத்தில் கொள்கல முடிவிடத்தின் மேல் வைத்து மென்றகடு அல்லது கொள் கல முடிவிலுள்ள உலோகத்தைத் தூண்டப்பட்ட இரேடியோ அதிர் வெண் மின்னோட்டத்தினுல் மென்றகட்டுத் திரவியத்திலுள்ள அல்லது மென்றகட்டின் மேல் பூசப்பட்டிருக்கும் அல்லது கொள்கல முடிவிடத்தி லுள்ள திரவியத்தில் பூசப்பட்டிருக்கும் ஒரு வெப்பப் பிளாத்திக்குத் திரவியத்தை கணிசமானளவு மென்மையாக்குவதற்கு போதுமான வெப்பநிலைக்கு வெப்பமாக்கப்படுகிறது. இதனுல் மென்றகடானது கொள் கலத்தை திருகாமல் நீக்கப்படத்தக்கதாக கொள்கலத்துடன் ஒட்டிக் கொண்டிருக்கின்றது.

இதில் 15 உரிமைகளும், ஒரு வரைதற் பத்திரமுமுள.

எஸ். எல். டீ சில்வா,
பேற்றன் பதிவுகாரர்.

கொழும்பு,
1968 ம் ஆடு பெப்ரவரி மீ 7 ந் உ.

8–8/9

---

## அறிவிப்பு

பின்வரும் விவரணம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :—

1966 மே 12 ம் திகதிக்குரிய 5796 ம் இலக்கம் [அ. ஐ. மா. இன் 456977 ம் இலக்க முதன்மை கோரும் வழமையான விண்ணப்பத் திகதி 19.5.65]

அலுமினியப் பரிசோதனைச்சாலைகள் ஸ்தாபனம் :—

" அலுமினியத்தை பெறுவதற்கான உப ஏலேட்டுக் காய்ச்சிவடித்தல் முறை சம்பந்தமான அல்லது அதற்குரிய அநுகூலங்கள் "

**பொழிப்பு**

1 ம் உரிமையிலிருந்து புதிது காணும் தன்மை நிச்சயப்படுத்தப் படலாம். அது பின்வருமாறு கூறப்படுகின்றது :—

அலுமினியம் உபஏலேட்டுக் காய்ச்சிவடித்தல் முறையிலிருந்து பிறப் பிக்கப்பட்ட அலுமினியமோ ரேலேட்டு வாயுவைப் பிரித்து, உலோக அலுமினியத்தையும் அலுமினிய மும்மேலேட்டையும் உண்டாக்குவதற் கான முறையில் அலுமினிய மோரேலேட்டு வாயுவை பிரித்தற் கருவிக் கூடாகச் செலுத்திக் கொண்டிருக்கையில், அலுமினியத்தின் உருகு நிலைக்கு உயர்ந்த வெப்பநிலைக்குக் குளிராக்கப்படல் வேண்டும். ஆனால் இவ்வெப்பநிலை அலுமினிய மோரேலேட்டினது பூரணபிரிகையைப் பிரதானமாய் விளைவிப்பதற்குப் போதுமான அளவு தாழ்வாக இருக்க வேண்டும். அலுமினியத்தின் உருகு நிலைக்கு உயர்ந்த வெப்பநிலையை நிலை நிறுத்திக் கொண்டிருக்கையில் பிரித்தற் கருவியிலிருந்து வெளி யேறும் வாயுவை இரண்டாவது ஸ்தானத்திற்குக் கடத்தி அவ்விரண் டாவது ஸ்தானத்திலிருக்கும் திரவ அலுமினியப் புகார்த்துளிகளை ஒன்ருக்கி, அலுமினியத்தின் உருகு நிலைக்கு உயர்ந்த வெப்பநிலையில் நீக்கவேண்டும்.

இதில் 9 உரிமைகளும் 3 உதாரணங்களும் 4 வரைதற் பத்திரங்களும் உள.

எஸ். எஸ். டீ சில்வா,
பேற்றன் பதிவுகாரர்.

கொழும்பு,
1968 ம் ஆடு பெப்ரவரி மீ 7 ந் உ.

9–8/10

## அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்

### 1.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது

# "இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)"

### வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும், மற்றும் நாட்களில் மு.ப. 9 மணி முதல் பி.ப. 4.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4 போயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல் 12 மணிக்கும், மற்றும் நாட்களில் பி.ப. 3.30 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின்கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புரெக்ரறுல்" கையொப்ப மிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரு. ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. .. | 220 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப் பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்து சேரவேண்டும்.

13. சந்தா விபரம் 1.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் :—

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரு. ச. | | வெளியூர் ரு. ச. |
|---|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 0 | .. | 60 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 0 | .. | 42 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 50 | .. | 51 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

### தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை ரு. ச. | | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 50 | .. | 20 |
| (ii) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 0 | .. | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 30 | .. | 15 |
| (ii) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 60 | .. | 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விளம்பரதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

### அட்டவணை—1970

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| செத்தெம்பர் | .. | 4. 9.70 | வெள்ளி | .. | 28. 8.70 | வெள்ளி | .. | பி.ப. | 3.30 |
| | | 11. 9.70 | வெள்ளி | .. | 4. 9.70 | வெள்ளி | .. | பி.ப. | 3.30 |
| | | 18. 9.70 | வெள்ளி | .. | 11. 9.70 | வெள்ளி | .. | பி.ப. | 3.30 |
| | | 25. 9.70 | வெள்ளி | .. | 18. 9.70 | வெள்ளி | .. | பி.ப. | 3 30 |
| ஒற்றோபர் | .. | 2.10.70 | வெள்ளி | .. | 25. 9.70 | வெள்ளி | .. | பி.ப. | 3.30 |
| | | 9.10.70 | வெள்ளி | .. | 2.10.70 | வெள்ளி | .. | பி.ப. | 3.30 |
| | | 16.10.70 | வெள்ளி | .. | 9.10.70 | வெள்ளி | .. | பி.ப. | 3.30 |
| | | 23.10.70 | வெள்ளி | .. | 16.10.70 | வெள்ளி | .. | பி.ப. | 3.30 |
| | | 30.10.70 | வெள்ளி | .. | 23.10 70 | வெள்ளி | .. | பி.ப | 3 30 |
| நவெம்பர் | .. | 5 11 70 | வியாழன் | .. | 30 10 70 | வெள்ளி | .. | பி.ப. | 3.30 |
| | | 12.11.70 | வியாழன் | .. | 5.11.70 | வியாழன் | .. | ந.ப. | 12.00 |
| | | 20.11.70 | வெள்ளி | .. | 12.11.70 | வியாழன் | .. | ந.ப. | 12.00 |
| | | 27.11.70 | வெள்ளி | .. | 20.11.70 | வெள்ளி | .. | ந.ப. | 12.00 |
| திசெம்பர் | .. | 4.12.70 | வெள்ளி | .. | 27.11.70 | வெள்ளி | .. | ந.ப. | 12.00 |
| | | 11.12.70 | வெள்ளி | .. | 4.12.70 | வெள்ளி | .. | ந.ப. | 12.00 |
| | | 18 12 70 | வெள்ளி | .. | 10.12.70 | வியாழன் | .. | பி.ப. | 3.30 |
| | | 24 12.70 | வியாழன் | .. | 17 12.70 | வியாழன் | .. | பி.ப. | 3.30 |
| | | 31.12.70 | வியாழன் | .. | 24.12.70 | வியாழன் | .. | பி.ப. | 3.30 |

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு மார்ச்சு மீ 5 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.